**மஹரகம நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹரகம நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள மஹரகம நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்படுகின்ற பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்தியுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 2.2 | 2015 ஆகஸ்ட் மாதத்தின் போது 607629 இலக்க நடைமுறைக் கணக்கு மூடப்பட்டிருந்த போதிலும் காசின் கீழ் ரூபா 2,052,258 பெயரளவு பெறுமதியொன்று மீளாய்வாண்டின் போதும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெயரளவு பெறுமதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 24 ஆந் திகதி 2155/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட நகர சபை நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 84 மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 2017 இன் பிரகாரம் நகர சபையினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் கணக்குகளை பேணிச் செல்வதற்கு தேவையான மாதிரி படிவங்கள் மற்றும் குறியீட்டு இலக்கங்களும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உள்ளூராட்சித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரிப் படிவம் மற்றும் குறியீட்டு இலக்கங்களின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மற்றும் 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 2155/7 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| நடப்பாண்டின் நிதிக் காலப் பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல பெறுமதிகளுக்காகவும் முன்னைய சமமான காலப்பகுதி தொடர்பாக ஒப்பீட்டுத் தகவல்கள் நகர சபையினால் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஒப்பீட்டுத் தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பொதுத் துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது ஒப்பீடு செய்வதற்கு இலகுவான முறையில் உள்ளபடியான, பாதீடு செய்யப்பட்ட மற்றும் முன்னைய ஆண்டின் உள்ளபடியான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நிறுவனத்திற்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக 03 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. சபைக்குச் சொந்தமான சகல சொத்துக்களும் இதன் மூலம் மீள்மதிப்பீடு செய்து 2021 இன் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் சபை நிதியத்திலிருந்து ரூபா 149,509,028 தொகை செலவில் 186 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்களின் பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட சகல சொத்துக்களும் மூலதனமாக்கப் படல் வேண்டும். |
| (இ) | சபை நிதியத்திலிருந்து அமுல்படுத்தப்படாத 23 செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 20,034,000 தொகை பூர்த்திசெய்யப்படாத வேலையின் கீழ் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இதற்கு முன்னைய ஆண்டுகளில் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது பூர்த்தி செய்யப்படாத வேலைகள் கணக்கீடு செய்யப்படாதிருந்த மையால் இந்த ஆண்டின் போதும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2021 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | நடைமுறை வேலைகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | அலுவலக உபகரணங்கள் வருடாந்தம் 12.5 சதவீதம் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 1,713,462 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் 7.5 சதவீதம் படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டமையால் | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியான பெறுமானத்தேய்வு கொள்கையின் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 128,510 ஆனமையால் ரூபா 85,672 இனால் பெறுமானத்தேய்வு பெறுமதி குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினம் ரூபா 184,598,363 தொகை அதிகரித்து பதியப்பட்டமையின் காரணமாக மிகை அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 716,652 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பேரேட்டில் பிரதி செய்யும் போது உரிய நிலையான சொத்துக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 331,691,844 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 58,109,485 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலுவை ஆதனவரி அறவிடுவதற்காக இனங்காணப்பட்ட ஆதனங்களின் எண்ணிக்கை 29995 ஆக இருந்ததுடன் 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையில் செலுத்தப்படாத ஆதனவரி ரூபா 10,879,644 தொகை மற்றும் 05 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் செலுத்தப்படாத ஆதனவரி ரூபா 16,544,837 ஆக காணப்பட்டது. அந்த பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையில் செலுத்தப்படாத ஆதனவரியை அறவிடுவதற்கு ஆதனங்களை தடைசெய்யும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஆதனவரி பரிசோதக உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடை வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் வாடகையாளர் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் வாடகை செலுத்தாது புறக்கணிப்பாராயின் வாடகை உடன்படிக்கை ஒரு தரப்பாக இரத்துச் செய்யும் அதிகாரம் நகர சபைக்கு சொந்தமாக இருந்த போதிலும் 06 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரை ரூபா 7,058,936 வாடகை தாமதமான 109 கடைகளின் வாடகை உடன்படிக்கையை இரத்துச்செய்து அந்த கடைகளை நகர சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழக்கு நடவடிக்கைகளுக்காக கோவைகள் சபை சட்டத்தரணிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாட்டில் காணப்படுகின்ற கொரோனா நிலைமையின் அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளது. | வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நாவின்ன விளையாட்டரங்கை கைப்பற்றுவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு நடப்பாண்டின் போது 13,717,577 தொகையை உள்ளடக்கி கூட்டுமொத்தமாக ரூபா 24,554,972 சபையினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரித்துறுதி மூலம் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்றல் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |